மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்

பி அண்ட் சி மில் பிரச்சனையில் 4-2-1992

அன்று நடத்தும் பேச்சுவார்த்தையின் போது,

சென்னைத் தொழிலாளர் சங்கம்

மற்றும்

பி அண்ட் சி மில்ஸ் ஸ்டாப் யூனியன்

சார்பாக,

சமர்ப்பிக்கப்படும்

முறையீடு.

சென்னைத் தொழிலாளர் சங்கம்

பி அண்ட் சி மில்ஸ் ஸ்டாப் யூனியன்

சென்னை - 600012.

உள்ளடக்கம் பக்கம்


1. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கட்கு முறையீடு 1-9

2. இணைப்பு எண் 1 - பி அண்ட் சி மில் பிரச்சனையில் மாநில அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் 10-14

3. இணைப்பு எண் 2- தொழிலாளர் துறை ஆணையரின் 22-11-91 உத்தரவின் மீது சங்கங்கள் இயற்றிய தீர்மானம் 15-18

4. இணைப்பு எண் 3 : ஐ.டி.பி.ஐ. டெலக்ஸ் செய்தி. 19-20

5. இணைப்பு எண் 4 : தீர்வு காணப்பட வேண்டிய தொழிலாளர் கோரிக்கைகள் 21-23

6. இணைப்பு எண் 5 : மூடல் காலத்திற்குத் தொழிலாளர்களுக்கு முழு ஊதியம் கோரும் உரிமை தொடர்பான உயர்நீதி மன்ற உத்தரவின் பகுதிகள், மற்றும் அதற்கான ஐடிபிஐ திட்டத்தின் நிதி ஒதுக்கீடு விபரங்கள் 24-30

7. இணைப்பு எண் 6 : பின்னி நிறுவனத்தின் சொத்துக்களை 'ரியல் எஸ்டேட்' வியாபாரம் தொடர்பான சங்கத்தின் கடிதங்கள் மற்றும் தொழில் மற்றும் நிதி சீரமைப்பு வாரிய நடவடிக்கைக் குறிப்பின் பகுதி. 31-40

1. கடந்த 1-4-1991 முதல் சட்டவிரோதமாக மூடப்பட்டுள்ள பி.அண்ட் சி. மில்லை மீண்டும் திறப்பது தொடர்பாக, தமிழக அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கும், தொழிலாளர் தரப்பு நியாயங்களுக்கு அளித்துள்ள ஆதரவுக்கும், 8000 பி.அண்ட் சி. மில் உழைப்பாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்கள் சார்பாக நன்றியை உரித்தாக்குகிறோம்.

இதுவரை, தமிழக அரசும், மாண்புமிகு முதல்வரும் எடுத்துள்ள நடவடிக்கைகள், இணைப்பு எண் 1 இல் விவரிக்கப்பட்டுள்ளன.

2. இது தொடர்பாக வழக்கில், உயர்நீதிமன்றம், 27-09-1991 அன்று அளித்த தீர்ப்பில், மில்லை மூடுவதற்கு அனுமதி கோரும் நிர்வாகத்தின் மனுவை மறுவிசாரணை நடத்தி முடிவு அறிவிக்குமாறு, மாநில அரசின் தொழிலாளர் துறை ஆணையருக்கு மீண்டும் அனுப்பி வைத்தது.

3. தொழிலாளர் துறை ஆணையர் நடத்திய மறு விசாரணையின் போது இந்த மில்லுக்கு மறுசீரமைப்புக்காக நிதி உதவி அளிப்பதற்கான திட்டங்களைப் பரிசீலனை செய்த இந்திய தொழில் வளர்ச்சி (ஐ.டி.பி.ஐ)வங்கி, அதன் அறிக்கைகளையும், விளக்கங்களையும் தாக்கல் செய்தது.

4. தொழிலாளர் ஆணையர் நிர்வாகத்தின் மூடல் அனுமதி கோரும் மனுவின் மீதான உத்தரவை 22-11-1991 அன்று பிறப்பித்தார்.

5. இந்த உத்தரவைப் பரிசீலித்து, சென்னைத் தொழிலாளர் சங்கமும், பி.அண்ட் சி. மில்ஸ் ஸ்டாப் யூனியனும் நிறைவேற்றிய

தீர்மானத்தில், மில்லை உடனடியாகத் திறந்து, தொழிலாளர்கள் அனைவருக்கும் வேலை அளிக்க வேண்டும் என்றும், மில்லை நவீனப் படுத்துவதற்கான திட்டம் உட்பட எல்லாப் பிரச்சனை களையுமே, மில் திறந்த பின்னர் பேசி முடிவெடுக்கலாம் என்றும், தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்பத் தயார் என்றும் அறிவிக்கப்பட்டது. இத் தீர்மானம் இணைப்பு எண் 2 இல் தரப்பட்டுள்ளது.

6. தொழிலாளர் ஆணையரின் 22-11-1991 தேதிய உத்தரவில், பிராசஸ் பிரிவை புவனகிரிக்கு மாற்றல் செய்ய அனுமதி அளித்தது தொடர்பாக, தொழில் தகராறு சட்டப் பிரிவு 25(ஒ)5 இன் கீழ், மறு ஆய்வு விண்ணப்பம், சங்கங்கள் சார்பில் அரசுக்கு அனுப்பப்பட்டது.

7. சங்கங்கள் மறு ஆய்வு விண்ணப்பம் அனுப்பிய பிறகு, முதல் மனுவை நிராகரித்தது சரியல்ல என்று கூறி, மில் நிர்வாகமும், மறு ஆய்வு விண்ணப்பத்தை அரசுக்கு அனுப்பியது.

8. இந்த மறு ஆய்வு விண்ணப்பங்கள் மீது, தொழிலாளர் துறைச் செயலாளர் நடத்திய விசாரணை 14-12-1991 அன்று முடிவுற்றது.

9. இப் பிரச்சனையில், அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்கள் முன்னிலையில், மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் 18-12-1991 அன்று பேச்சுவார்த்தை நடத்தினார். மீண்டும் ஐ.டி.பி.ஐ பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்துவதாக அமைச்சர் தெரிவித்தார்.

10. ஆனால், இந்த மில் சம்பந்தமாக ஐ.டி.பி.ஐ பரிசீலித்த திட்டங்கள் அனைத்துமே லாபகரமானவை அல்ல என்பதால்,

...3

அவற்றின் மீது மீண்டும் பேச்சுவார்த்தை நடத்திப் பயனில்லை என்று, பேச்சுவார்த்தைக்கு வர மறுத்து, ஐ.டி.பி.ஐ தலைமையகம் மாநில அரசுக்கு 'டெலக்ஸ் செய்தி' அனுப்பியது.

இது இணைப்பு எண் 3இல் இடம் பெற்றுள்ளது.

11. இதன் பின்னர், அனைத்துத் தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இந்த மில்லைத் திறப்பதற்காகப் பேச்சு வார்த்தை நடத்த முன் வந்துள்ளதை நன்றியுடன் வரவேற்கிறோம்.

12. மில்லைத் திறப்பது தொடர்பாகக் கீழ்வரும் ஆலோசனைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு முன்வைக்கிறோம்.

(அ) 08-02-1991, 22-11-1991 ஆகிய தேதிகளில், மில்லை மூடுவதற்கு அனுமதி கோரும் நிர்வாகத்தின் மனு, இரண்டு முறை நிராகரிக்கப்பட்டுள்ளது. 22-11-1991 தேதிய அரசின் உத்தரவில், 30 தினங்களுக்குள் மில்லைத் திறக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. இந்த காலக்கெடுவும் கடந்துவிட்ட நிலையில், நிர்வாகம் மில்லை உடனடியாகத் திறக்க, அரசு வலியுறுத்தி நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும்.

(ஆ) 1-4-1991 முதல், அனைத்துத் தொழிலாளர்களும் ஒட்டுமொத்தமாக வேலைநீக்கம் செய்யப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் பணிக்கால (சர்வீஸ்) தொடர்ச்சியோடு உடனடியாக வேலை அளிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். பயிற்சியாளர்கள் அனைவருக்கும் வேலை உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பல தொழிலாளர்கள் அநியாய வேலைநீக்க நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் பணிக்காலத் தொடர்ச்சியோடு வேலை அளிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

(ஈ) மில்லை நவீனப்படுத்துவதற்கான திட்டம் பற்றி, நிதி நிறுவனங்கள், நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்கள் (சென்னைத் தொழிலாளர் சங்கம், பி.அண்ட் சி. மில்ஸ் ஸ்டாப் யூனியன்) மில் திறக்கப்பட்ட பின்னர், தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு சுமுக தீர்வு காண மாநில அரசு உரிய நடவடிக்கையும் ஏற்பாடும் செய்ய வேண்டும். இப் பேச்சுவார்த்தைகள் ஒரு நபர் ( திரு கே.பி.எஸ்.சிங்)கமிஷன் அறிக்கை, உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் ஐ.டி.பி.ஐ பரிசீலனை அறிக்கை விபரங்களை அடிப்படையாகக் கொண்டு நடைபெற வேண்டும்.

(உ) பி.அண்ட் சி. மில் தொழிலாளர்களுக்கு, தமிழகப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு அமுல்படுத்தப்பட்டுள்ள 'வரதன் அவார்ட்' ஊதிய உயர்வு உள்ளிட்ட, தொழிலாளர் கோரிக்கைகளையும், இந்த நிலையில் பேசித் தீர்வு காண அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தக் கோரிக்கைகள் பற்றிய விபரங்கள் இணைப்பு எண் 4 இல் தரப்பட்டுள்ளன.

(ஊ) சட்டவிரோதமாகவும், தொழிலாளர் துறை ஆணையரின் உத்தரவை மீறியும், மில் மூடப்பட்ட காலத்திற்கு, 1-4-1991 முதல் மில் திறக்கப்படும் நாள் வரை, தொழிலாளர்களுக்கு முழு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுச் செயல்படுத்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். இந்தக் கோரிக்கையின் நியாயத்தை அங்கீகரித்து, சென்னை உயர்நீதிமன்றத்

தீர்ப்புகளில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஐ.டி.பி.ஐ நிதி உதவித் திட்ட மறு பரிசீலனை அறிக்கையில் 1-4-1991 முதல் 30-9-1991 வரையிலான காலத்திற்கு ரூ.4.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விபரங்கள் இணைப்பு எண் 5இல் தரப்பட்டுள்ளன.

13. மில் நிர்வாகம், சாயப் பகுதியை (பிராசஸ் பிரிவை) புவனகிரிக்கு மாற்ற சங்கங்கள் எழுத்து மூலமாக ஒப்புதல் அளித்தால் மில்லைத் திறக்கத் தயாராக உள்ளது எனவும், ஏனைய பிரச்சனைகளை ஆலை திறந்த பின்னர் பேசி முடிவெடுக்கலாம் எனவும், 23-11-1991 தேதியகடிதத்தில் தெரிவித்துள்ளது. ஆனால் 13-12-1991 அன்று, தொழிலாளர் துறைச் செயலாளர் முன் ஐ.டி.பி.ஐ பிரதிநிதிகள் அளித்த வாக்குமூலத்திலும், 26-01-1992 அன்று ஐ.டி.பி.ஐ. அனுப்பிய டெலக்ஸ் செய்தியிலும், புவனகிரி மாற்றல் உள்ளிட்ட, எந்தத் திட்டமும் லாபகரமானதல்ல என்றும், ஐ.டி.பி.ஐ ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவித் திட்டம் எதுவும் இல்லை என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நிர்வாகம் இவ்வாறு முன் நிபந்தனை விதிப்பது, மில்லைத் திறப்பதற்கு உதவிகரமானதல்ல என்பதை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

14. புவனகிரி மாற்றல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க சங்கங்கள் இயலாமை தெரிவிப்பது, வறட்டுத் தனமான எதிர்ப்பல்ல என்பதையும், நிர்வாகம் முன்வைத்துள்ள, புவனகிரி மாற்றல் திட்டத்திற்கு ஐ.டி.பி.ஐ விதித்துள்ள நிபந்தனைகள், இந்த மில்லின் எதிர்காலத்தையும், 8000 தொழிலாளர்களின் நலனையும் பாதுகாக்க முடியாத ஆபத்தை ஏற்படுத்தும் என்பதையும் சங்கங்கள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளன.

ஐ.டி.பி.ஐ யின் திட்ட மதிப்பீட்டு அறிக்கைகள், புவனகிரி மாற்றல் திட்டத்திற்கு, தொழிலாளர் ஆணையர் விதித்துள்ள நிபந்தனைகளை அமுல்படுத்த இயலாத சூழ்நிலையே ஏற்படும் என்பதைத் தெளிவாக்குகின்றன.

15. ஐ.டி.பி.ஐ முன் நிர்வாகம் சமர்ப்பித்துள்ள புவனகிரி மாற்றலை உள்ளடக்கிய திட்டத்தில் கீழ்குறித்த அம்சங்கள் தொழிலாளருக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இந்த பாதிப்புகள் இன்னமும் நீடிக்கவே செய்கின்றன என்பது கவனத்தில் கொள்ள வேண்டுவதாகும்.

* மில்லின் நூற்பாலை (ஸ்பின்னிங்) பகுதிகளில் ஊசிகளின் எண்ணிக்கை இன்றுள்ள 88208 லிருந்து 66153 ஆகக் குறைக்கப்படும்.
* மில்லின் நெசவாலை (வீவிங்) பகுதிகளில் தறிகளின் எண்ணிக்கை இன்றுள்ள 2074 என்பது 808 ஆகக் குறைக்கப்படும்.
* இவற்றின் விளைவாகத் தொழிலாளர் எண்ணிக்கை கீழ்வருமாறு குறைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| சென்னை பி அண்ட் சி மில்லில் | .. | 2942 |
| புவனகிரி பிராசஸ் பிரிவில் | .. | 895 |
| மொத்தம் | .. | 3837 |

இன்று புவனகிரிக்கு மாற்ற உத்தேசிக்கப்படும் பிராசஸ் பிரிவில் தற்போது சென்னையில் சுமார் 2000 தொழிலாளர்களும், மற்ற பிரிவுகளில் மீதமுள்ள 6000 தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர்.

* தறி எண்ணிக்கை குறைப்பதன் விளைவாக மில்லில் நெய்யப்படும் துணி அளவு சரிவதை ஈடுகட்ட நிர்வாகம் விசைத்தறி உற்பத்தியாளர்களிடமிருந்து துணியை வாங்கி, புவனகிரியில்

பதப்படுத்த திட்டமிட்டுள்ளது. இது விசைத்தறித் துணியை மில் துணியாக முத்திரை குத்தி விற்கும் ஏற்பாடு. இது அனுமதிக்கப்பட்டால் மீதமுள்ள தறிகளையும் காலப் போக்கில் நீக்கிவிடும் ஆபத்து உண்டு.

* புதிய வேலைப்பளு நிர்ணயம், தொழிலாளர் எண்ணிக்கை குறைப்பு என்பவை, புவனகிரி மாற்றல் திட்டத்தோடு பின்னிப்பிணைந்தவை. இவற்றை நிர்வாகம் தொழிலாளர் ஆணையர் தீர்ப்பின் மீதான மறு ஆய்வு விண்ணப்பத்திலும் வலியுறுத்தியுள்ளது.

* புவனகிரிக்கு மாற்றல் உள்ளடக்கிய திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதற்கு ஐ.டி.பி.ஐ., மத்திய மாநில அரசுகளுக்கு சில நிபந்தனைகளை விதித்துள்ளதோடு, தொழிலாளர்கள் 2001ம் ஆண்டு வரை, ஊதிய முடக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளது. ( தமிழக அரசின் பிரதிநிதி ஐ.டி.பி.ஐ கூட்டிய கூட்டத்தில் மாநில அரசுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது)

* இந்த பாதிப்புகள் நீடிப்பது மட்டுமின்றி, இதர பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு இணையான 'ஊதிய அவார்ட்' அமுல் படுத்துவதற்கான வாய்ப்பே இல்லாமல் போகும் அபாயமும் உண்டு.

16. இந்தப் பிரச்சனைகள், தமிழகத்தில் 8000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் இந்தப் பாரம்பரியப் பெருமை மிக்க பி&சி மில்லின் எதிர்காலத்துக்கும், உழைப்பாளிகளுக்கும் மிக முக்கியமானவை. இவற்றின் மீது, தொழிலாளர்களுக்கு சாதகமான தீர்வு காணப் படுவதற்கு வழிவகை இல்லாத நிலையில்தான், மில்லை நவீனப் படுத்துவதற்கான திட்டத்தைப் பேச்சுவார்த்தை மூலம் இறுதியாக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இதில் உள்ள நியாயத்தை மாண்புமிகு முதலமைச்சர் அங்கீகரிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

17. ஐ.டி.பி.ஐ நிதி உதவியை எதிர்பார்க்காமலேயே நிர்வாகமே மில்லைத் திறந்து நடத்தும் நிலை இன்று இல்லை. ஐடிபிஐ இதுவரை எந்த நிதி உதவித் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கவில்லை. மேலும், பின்னி நிறுவனம், ஒரு நலிவடைந்த நிறுவனமாக, தொழில் மற்றும் நிதி சீரமைப்பு வாரியத்தால் அறிவிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறு மிக நெருக்கத்தில் உள்ளது. இந்நிலையில், மில் உடனடியாகத் திறக்கப்பட்ட பின்னரே, நவீனமயமாக்கும் எந்த திட்டத்தையும் இறுதியாக்க இயலும். இல்லாவிடில், ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் கம்பெனியைப் போல, ஒப்பந்தம் முடிந்தும், ஆலை திறக்க ஆண்டுக் கணக்கில் தள்ளிப்போவது போன்ற நிலை எழக்கூடிய ஆபத்து உண்டு. என்பதையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுகிறோம். எனவேதான், மில்லைத் திறக்கச் செய்து, எல்லாப் பிரச்சனைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது சாலச் சிறந்தது எனவும், இப் பேச்சுவார்த்தையில் சுமுக முடிவு காண அரசுடன் ஒத்துழைக்கத் தயார் எனவும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

18. நிர்வாகத்தின் புவனகிரி மாற்றல் திட்டம், சென்னையில் மில்லுக்குச் சொந்தமான நிலங்களை 'ரியல் எஸ்டேட்' வியாபாரத்துக்குப் பயன்படுத்தும் உள்நோக்கம் உடையது என்பதையும், மாநிலஅரசு அளித்த நகர்புற நில உச்சவரம்பிலிருந்து விதிவிலக்கு, உபரி சொத்துக்களை விற்க அனுமதி ஆகியவை முறைகேடாக ஆதாயம் தேடப்பயன்படுத்தப்படும் என்பதையும், சங்கங்கள், மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளன. இது குறித்து, தொழில் மற்றும் நிதி சீரமைப்பு வாரியம், மாநில அரசின் கவனத்தை ஈர்த்து, விபரமான அறிக்கை தாக்கல் செய்யப்படக் கோரியுள்ளது. இந்த விபரங்கள் இணைப்பு எண் 6 ல் இடம் பெற்றுள்ளன.

19. இந்நிலையில், மில்லைத் திறப்பதற்கான மாநில அரசின் உத்தரவுகளை அமுல்படுத்த உரிய வழிவகைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும். இதற்கான ஆக்கபூர்வமான, முழு ஒத்துழைப்பையும் சங்கங்கள் அளிக்கும். இது குறித்து, அரசுடன் விரிவான முறையில் பேச்சுவார்த்தை நடத்தவும் சங்கங்கள் தயாராக உள்ளன.

20. 1990-91ஆம் ஆண்டுக்கான போனஸ் பி அண்ட் சி மில் தொழிலாளர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. இதே நிர்வாகம், பங்களூர் மில், பின்னி இன்ஜினியரிங் மற்றும் தலைமை அலுவலக ஊழியர்களுக்கு போனஸ் வழங்கி விட்ட போதிலும், பி அண்ட் சி. மில்லின் 8000 தொழிலாளர்களுக்கு மட்டும் போனஸ் வழங்க மறுத்து வருகிறது. எனவே இந்த போனஸ் பிரச்சனையிலும் மாண்புமிகு முதலமைச்சர் தலையிட்டு, 8000 தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்க ஆவன செய்து உதவ வேண்டுகிறோம்.

21. 8000 தொழிலாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்துள்ள குடும்பங்களுக்கும் வாழ்வளிக்கும் வகையில், விரைவில் இந்த மில்லைத் திறக்க ஆவன செய்யுமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

சென்னை

4 பிப்ரவரி 1992

(உ.ரா. வரதராசன்)
தலைவர்
சென்னைத் தொழிலாளர் சங்கம்
பி அண்ட் சி மில்ஸ் ஸ்டாஃப் யூனியன்

இணைப்பு எண் 1

(1) பி அண்ட் சி மில்லின் பிராசஸ் பகுதியை புவனகிரிக்கு மாற்றுவது, தொழிலாளர் நலன்களுக்கு பாதகமானது என்ற ஒரு நபர் கமிட்டியின் முடிவை மாநில அரசு ஆதரித்து, உயர்நீதி மன்றத்திற்கு அரசுத்தலைமை வழக்கறிஞர் மூலம் தெரிவித்தது.

மாநில அரசின் தொழிலாளர் துறைச் செயலாளர்
கடித எண்: 26050/அ1/91 நாள் 28-07-1991

(2) பி அண்ட் சி மில் பிரச்சனையில், "தொழிலாளர் குடும்பங்கள் மகிழ்ச்சி அடையும்படியான ஒரு தகுந்த முடிவை விரைவில் எடுக்க அரசு எல்லா விதமான நடவடிக்கைகளும் எடுத்து வருகிறது" என்று மாண்புமிகு முதலமைச்சர் 1991, செப்டம்பர் 7 ஆம் நாள், பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

இந்த வேண்டுகோளை இணைத்து, அரசின் தொழிலாளர் துறைச் செயலாளர் எழுதிய கடிதம் எண். 26050/அ1/91
நாள்: 07-09-1991

(3) 09-09-1991 அன்று சங்கத் தலைவர் உ. ரா. வரதராசனை, மாண்புமிகு முதலமைச்சர் கோட்டையில் சந்தித்துப் பேசினார்; பேச்சு வார்த்தையில் கீழ்க்குறித்த உறுதியையும் அளித்தார்:

* மில்லை நிரந்தரமாக மூட மாநில அரசு ஒருபோதும் அனுமதிக்காது
* மில்லை சென்னையிலேயே திறந்து நடத்த நிர்வாகத்தை அழைத்துப்பேசி மாநில அரசு வலியுறுத்தும்

...

* சென்னையிலேயே மில்லை நடத்த நிதி உதவி அளிக்குமாறு,
இந்திய தொழில் வளர்ச்சி (ஐடிபிஐ) வங்கியை
மாநில அரசு கோரும்

இது தொடர்பாக 10-09-1991 நாளிதழ்களில் செய்திகள் இடம்பெற்றன.

(4) இந்தப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து, மில் தொழிலாளர்கள் 8136 பேருக்கும் தலா ரூ.400 நிதி உதவி அளிக்க, மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டார். இத்தொகை 1991 அக்டோபர் மாதத்தில் வழங்கப்பட்டது.

(5) உயர்நீதி மன்றத்தின் பரிந்துரையை ஏற்று, மாநில அரசு, மில் தொழிலாளர்களுக்குக் குடும்ப அட்டை மூலம் வழங்கும் அத்தியாவசியப் பண்டங்களைக் கடனாக ரூ.9 லட்சம் மதிப்புக்கு வழங்கி உள்ளது.

LABOUR & EMPLOYMENT DEPARTMENT.

LETTER No. 26050/AI/91 -

From:

Thiru M. Venkatachalam, I.A.S.,
Secretary to Government,

To:

The Advocate General,
High Court, Madras-600 104.

Fort St. George, Madras-600 009 dated 28-7-1991.

Sub: W.A.Nos.530 and 531 of 1991, High Court, Madras - B & C Mills - Report of One Member Commission - Stand of the State Government - Regarding.

-----

I am directed to recall the telephonic conversation you had with the Secretary to Government, Labour & Employment Department about the Government's stand on the report of One Member Commission on B & C Mills and to state as follows:-

2. The State Government support the findings of the One Member Commission that shifting of the processing section to Bhuvanagiri will be detrimental to the interest of the workers. At the same time, the State Government are interested in seeing that the Mill is reopened at the earliest.

3. I am therefore, request you to convey the above stand of the State Government to the High Court, Madras.

Yours faithfully,

(signature) 28/7/91

Joint Secretary to Government
Labour and Employment Department

LABOUR AND EMPLOYMENT DEPARTMENT 7.9.91

Letter No.26050/A.1/91-

From

Thiru R. Varadharajalu, I.A.S.,
Secretary to Government.

To

Thiru W.R. Varadharajan,
A.E.113, 10th Main Road,
Anna Nagar,
Madras - 600 040.(w.e.)

Fort St. George, Madras - 600 009, dated 07.09.1991

Sir,

Sub: LABOUR - B & C Mills Limited, Madras - Reopening of - Press release by Hon'ble Chief Minister.

-----

I am enclosing a copy of the Press release issued by the Honourable Chief Minister regarding reopening of B & C Mills Limited, Madras for your kind information.

Yours faithfully,

7.9.91

SECRETARY TO GOVERNMENT.

7.9.91

சென்னை

## மாண்புமிகு முதல்வரின் அறிக்கை

சென்னையில் ஏற்பட்டுள்ள மின்னி பஞ்சாலை பிரச்சினை உயர் நீதி மன்றத்தின் முன் இருக்கிறது. விசாரணைகள் முடிந்து நீதி மன்றம் ஒரு முடிவினை எடுக்க இருக்கிறது. அதற்குப் பிறகு நீதிமன்ற முடிவுக்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும் நிலை இருந்து வருகிறது.

அதற்குள்ளாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஊர்வலம், போராட்டம் நடத்த இருப்பதாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் அரசு, தொழிலாளர் நலன் கருதி என்ன நடவடிக்கை எடுக்கமுடியும் என்பது பற்றி செயலாளர்களோடு ஆலோசனை செய்து வருகிறேன்.

தொழிலாளர் குடும்பங்கள் மகிழ்ச்சியடையும் படியான ஒரு நல்ல முடிவை விரைவில் எடுக்க அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

தொழிலாளர்கள் நடத்தவிருக்கும் போராட்டங்களையும் ஊர்வலங்களையும் கைவிடுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

(Sd.) ஜெயலலிதா
முதலமைச்சர்.

உண்மை நகல்:

authenticated.

[signature]
7991
R. VARADHARAJULU · IAS
Secy to Govt Labour Dept
Madras. 9

இணைப்பு எண்: 2 

எட்டு மாதமாக சட்டவிரோதமாக மூடப்பட்டுள்ள

## பி & சி மில்லை நிபந்தனையின்றி திறந்திடுக!

## தமிழக அரசே, தலையிட்டு மில்லைத் திறக்க ஏற்பாடு செய்க!

சென்னைத் தொழிலாளர் சங்கம்

மற்றும்

பி & சி ஸ்டாப் யூனியன்

தீர்மானம்

சென்னை, 26 நவம்பர், 1991

1.4.1991 முதல் பின்னி நிர்வாகத்தால் சட்டவிரோதமாக மூடப்பட்டுள்ள பி & சி மில்லை மூடுவதற்கு நிர்வாகம் முன்வைத்த காரணங்கள் அனைத்தும் நியாயமானவையும் அல்ல, போதுமானவையும் அல்ல என்று கூறி, மூடுவதற்கு அனுமதி கோரும் மனுவை, தொழிலாளர் ஆணையர் நிராகரித்து, 22.11.91 அன்று பிறப்பித்துள்ள உத்தரவை சென்னைத் தொழிலாளர் சங்கம் மற்றும் பி & சி மில் ஸ்டாப் யூனியன் ஆழமாக பரிசீலித்தது.

இரண்டாவது முறையாக நிர்வாகத்தின் மூடல் மனு நிராகரிக்கப்பட்டு விட்ட நிலையில் பி & சி மில்லை நிர்வாகம் உடனடியாகத் திறந்து, தொழிலாளர்கள் அனைவருக்கும் உடனே வேலையளிக்க வேண்டும் என்றும், ஒட்டுமொத்தமாக 1.4.1991 முதல் வேலை நீக்கம் செய்யப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்ட அனைத்துத் தொழிலாளர்களுக்கும், சங்க நிர்வாகிகள் உட்பட அநியாயமாக வேலை நீக்க நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும் பணிக்கால தொடர்ச்சியோடு சட்டவிரோத மூடல் காலத்திற்கு முழுச் சம்பளமும் இதர சலுகைகளும் அளிக்க வேண்டும் என்று கோருகிறோம்.

தொழில் தகராறு சட்டத்தின் 25(ஒ) பிரிவின் வரம்பிற்கும், தொழிலாளர் ஆணையரின் அதிகார வரம்பிற்கும் அப்பாற்பட்டு, தொழிலாளர் ஆணையர் தனது 22.11.91 தேதிய உத்தரவில், மில்லின் பிராசஸ் பகுதியை புவனகிரிக்கு மாற்றுவது சம்பந்தமான கருத்துக்கள் முறையற்றதும், தவறானதும் ஆகும். 18.11.91 அன்று விசாரணை முடிவுற்ற பின்னர் நிர்வாகம், தொழிலாளர் ஆணையருக்கு அளித்த ஒரு கடிதத்தில் கூறப்பட்ட கருத்துக்களை மட்டுமே ஒருதலைப்பட்சமாகப் பரிசீலித்து, அக்கடிதத்திற்கு சங்கங்கள் 20.11.91 தேதியில் அளித்த மறுப்புக் கடிதத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமலும், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கமிஷனின் ஏப்ரல் 1991 மாத அறிக்கையில் புவனகிரியில் எரிவாயுக் கிணறே இல்லை என்ற தகவலை சங்கங்கள் தாக்கல் செய்த ஆவணத்தையும் பரிசீலிக்காமலும், தொழிலாளர் ஆணையர் புவனகிரி மாற்றம் சம்பந்தமாக உத்தரவில் கருத்துக் கூறியிருப்பது முற்றிலும் தவறானதும், அதிகார வரம்பை மீறிய செயலும் ஆகும்.

..2/-

எவைவ தொழில் தகராறு சட்டப் பிரிவு 25 (ஒ)5- இன் கீழ், தொழிற்சங்கங்கள் சார்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு விண்ணப்பத்தை உரிய முறையில் பரிசீலித்து புவனகிரி மாற்றல் சம்பந்தமாக, தொழிலாளர் ஆணையரின் 22.11.91 தேதிய உத்தரவில் கண்டுள்ள கருத்துக்களை நீக்க வேண்டும் என்று கோருகிறோம்.

புவனகிரிக்கு பிராசஸ் பகுதியை மாற்றுவது தொடர்பாக, சென்னை உயர்நீதி மன்றம், முன்னாள் தலைமை நீதிபதி திரு. கே.பி. என். சிங் தலைமையில் ஒரு விசாரணை கமிஷன் அமைத்தது. இந்த கமிஷன் முடிவுக்கு கட்டுப்பட்டு ஏற்று நடப்போம் என்று, உயர்நீதி மன்றத்தில் நிர்வாகமும், தொழிற்சங்கங்களும் இசைவு தெரிவித்திருந்தன. அந்த விசாரணை கமிஷன் பிராசஸ் பகுதியை புவனகிரிக்கு மாற்றுவது தொழிலாளர் நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று முடிவு தெரிவித்தது. அந்த முடிவை ஆதரிப்பதாக தமிழக அரசு உயர்நீதி மன்றத்தில் அரசுத் தலைமை வழக்கறிஞர் மூலம் அதிகாரப்பூர்வமாக அறிவிப்புச் செய்தது. ஆனால் மாநில அரசின் நிலைபாட்டுக்கு முரணாகவும், அதிகார வரம்பை மீறியும், தொழிலாளர் ஆணையர் தனது உத்தரவில் கருத்துக் கூறியுள்ளதற்கு, தமிழக அரசும், முதலமைச்சரும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு நபர் (கே.பி.என்.சிங்) கமிஷன் முடிவு அறிவித்த போது அதை ஏற்க மறுத்த மில் நிர்வாகம், அதிகார வரம்பை மீறி தொழிலாளர் ஆணையர் தெரிவித்த கருத்தை மட்டும் அவசர அவசரமாக தொழிற்சங்கங்களின் மீது திணிக்க முற்படுவது, நிர்வாகத்தின் உள்நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

தொழிலாளர் ஆணையர் உத்தரவில் பிராசஸ் பகுதியை புவனகிரிக்கு மாற்ற அனுமதி வழங்கியிருந்த போதிலும், தொழிற்சங்கங்கள் எழுத்து மூலமாக ஒப்புதல் தர வேண்டும் என்று நிபந்தனை விதிக்கவில்லை.

ஐடிபிஐ நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே நவீனமயமாக்கும் திட்டத்தின் மீது ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளது என்று நிர்வாகம் கூறுகிறது.

ஆனால் ஐடிபிஐ, தொழிலாளர் ஆணையர் முன் தாக்கல் செய்த ஆவணங்களில் கீழ்க்கண்டவாறு தெளிவாகக் கூறியுள்ளது.

1. புவனகிரி மாற்றல் உள்ளிட்ட மூன்று திட்டங்களுமே லாபகரமானது அல்ல.
2. நிர்வாகம், மாநில அரசு, மத்திய அரசு ஆகிய மூன்று தரப்பிலும், வட்டியில்லாத கடன் தொகைகள் வழங்க முன்வரவேண்டும்; தொழிலாளர்கள் 2001 வரை ஊதிய முடக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்; மாநில அரசும் - மத்திய அரசும் வங்கிக் கடன் வட்டியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். மாநில அரசு விற்பனை வரியை 2001 ம் ஆண்டு வரை தள்ளி வைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால்தான் புவனகிரி மாற்றல் திட்டம் கூட லாபகரமாக ஆகும்.

..3/-

3. புவனகிரி மாற்றல் திட்டத்தின் பகுதியாக, பி அண்ட் சி மில்லில் தறிகள் எண்ணிக்கையைக் குறைத்து, விசைத்தறி உற்பத்தியாளர்களிடமிருந்து துணி வாங்குவதற்கான ஏற்பாடும் உள்ளது.

4. புவனகிரி மாற்றல் திட்டத்தின் கீழ் ஐடிபிஐ அறிக்கையில் தொழிலாளர் எண்ணிக்கை கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பி அண்ட் சி மில்லில் | 2942 |
| புவனகிரியில் | 895 |
| மொத்தம் | 3837 |

5. தொழிலாளர் எண்ணிக்கையை சீரமைப்பு என்ற பெயரால் மேற்குறித்த அளவுக்குக் குறைத்து, வேலைப்பளுவை உயர்த்த வேண்டும்.

தொழிலாளர் ஆணையர் உத்தரவுக்கும் ஐடிபிஐ அறிக்கைக்கும் இதுபோன்ற பல அம்சங்களில் வேறுபாடுகள் உள்ள நிலையில், ஐடிபிஐ கோரும் விதத்தில் எழுத்து மூலமாக சங்கம் ஒப்புதல் தர வேண்டும் என்று கோருவது சரியல்ல.

மில்லை நவீனப்படுத்துவதற்கான முயற்சியில் தொழிலாளர்கள் ஒத்துழைப்பைத் தர என்றுமே தயங்கியதில்லை. ஆனால் நவீனமயமாக்கும் திட்டம் எதுவும், இந்த பி அண்ட் சி மில்லின் நலனையும், தொழிலாளர்கள் நலனையும் பாதுகாக்கும் வகையில் தான் இருக்க வேண்டும் என்று தொழிலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

பி அண்ட் சி மில் தொழிலாளர்களுக்கு, தமிழகப் பஞ்சாலை தொழிலாளர்களுக்கு 1986 முதல் அமுலில் உள்ள ஊதியத் தீர்ப்பின்படி ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்பது தொழிற்சங்கங்களின் நீண்டகாலக் கோரிக்கை. நிர்வாகமோ, வரதன் தீர்ப்பை அமல்படுத்துவதற்கு மறுத்து, புவனகிரிக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கு 200 ரூபா பி அண்ட் சி மில் தொழிலாளர்களுக்கு 100 ரூபாயும் மட்டுமே ஊதிய உயர்வு அளிக்க முடியும் என்ற நிலை எடுத்தது. ஆனால் தொழிலாளர் ஆணையர் உத்தரவில், பி அண்ட் தொழிலாளர்களுக்கு பஞ்சாலை ஊதியத் தீர்ப்புப் படி, ஊதிய உயர்வு வழங்குவதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

நிர்வாகத்தின் புவனகிரி மாற்றலை உள்ளடக்கிய நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் வேலைப் பளுவை உயர்த்த வேண்டும் எனவும், தொழிலாளர் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆணையர் உத்தரவில், உற்பத்தித் திறன் குறைவு என்பதோ தொழிலாளர் எண்ணிக்கை அதிகம் என்பதோ ஏற்றுக்கொள்ளப் படவில்லை. தொழிலாளர் ஆணையரின் உத்தரவின் இந்த பகுதியை ஏற்றுக் கொண்டு, வேலைப் பளு உயர்வு, தொழிலாளர் எண்ணிக்கை குறைவு ஆகியவற்றை நிர்வாகம் கைவிடுவதை ஐடிபிஐ ஏற்றுக் கொண்டு திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்க முன் வரும் என்பது உத்தரவாதம் ஆக்கப்படவில்லை.

சட்டவிரோத மூடல் காலத்திற்கு தொழிலாளர்களுக்கு முழுச் சம்பளம் கோரும் உரிமை உண்டு என்று சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பில் எடுத்துக் கூறப் பட்டுள்ள தொழிலாளர் ஆணையர் உத்தரவில் இது தொடர்பான எந்த நிபந்தனையும் இல்லை. நிர்வாகமும் இதற்கான உறுதி மொழியை அளிக்க முன்வரவில்லை. இப்படிப் பேசித் தீர்வு காணவேண்டிய ஏராளமான பிரச்சனைகள் உண்டு என்பதை நிர்வாகமே அங்கீகரிக்கின்றது. அதனால் தான் நிர்வாகத்தின் 23.11.91 தேதிய கடிதத்தில் "ஏனைய பிரச்சனைகளை ஆலை திறந்த பின்னர் பேசி முடிவெடுக்கலாம்" என்று குறிப்பட்டுள்ளது.

மில்லை நவீனப்படுத்துவதற்கான திட்டம் உட்பட எல்லாப் பிரச்சனைகளையுமே மில் திறந்த பின்னர் பேசி முடிவெடுக்கலாம். மில்லைஉடனடியாக திறக்க வேண்டும் என்று தொழிற் சங்கங்கள் நிர்வாகத்தைக் கோரியுள்ளன.

எட்டுமாதமாக சட்டவிரோதமாக மூடப்பட்டுள்ள பி அண்ட் சி மில்லை நிபந்தனையின்றி உடனடியாகத் திறக்க, தமிழக அரசு தலையிட்டு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். "தொழிலாளர் குடும்பங்கள் மகிழ்ச்சியடையும் படியான ஒரு தகுந்த முடிவை விரைவில் எடுக்க அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது" என்று கடந்த 7.9.91 தேதியிலேயே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா அவர்கள் அறிக்கை விட்டிருந்ததை முதலமைச்சருக்கு நினைவுப் படுத்தி, மில்லைத் திறக்க ஏற்பாடு செய்துஉதவுமாறு பி & சி மில்லின் 8000 தொழிலாளர்கள் அவர் தம் குடும்பங்கள் சார்பாக வேண்டுகோள் விடுக்கிறோம்.

மில்லை நிபந்தனையின்றி திறக்க நிர்வாகம் முன் வருமேயானால் - அதற்கான நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டு உதவுமானால் - தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்புவதற்குத் தயார். மில்லை நவீனப்படுத்துவதற்கான திட்டம் உட்பட எல்லாப் பிரச்சனைகளையும், தமிழக அரசு, ஐடிபிஐ, ஸ்டேட் பாங்க், நிர்வாகம், தொழிற்சங்கங்கள் கூடிப்பேசி, மில்லின் எதிர்காலத்தையும் தொழிலாளர் நலன்களையும் பாதுகாக்கத் தகுந்த முடிவுகளை எடுக்க சங்கங்கள் ஒத்துழைக்கத் தயார் என்று மாநில அரசுக்கும், நிர்வாகத்திற்கும் தெரிவிக்கிறோம்.

உ. ரா. வரதராசன்
தலைவர்,
சென்னைத் தொழிலாளர் சங்கம்
பி & சி மில் ஸ்டாப் யூனியன்.

சென்னை
26 நவம்பர் 1991.

3/27/12/91 9.30 am

இணைப்பு எண்: 3

By Special Messenger:

LABOUR & EMPLOYMENT DEPARTMENT
SECRETARIAT, MADRAS-9

Letter No.83673/A1/91 dated 26.12.1991
****

From
Thiru A.Subramaniam, B.Sc.B.L.,
Additional Secretary to Government.

To
The General Secretary, The Madras Labour Union,
176 Strahans Road, Madras-12(w.e)
The General Secretary, B & C Mills Staff Union,
60, Krishnadass Road, Madras-12(w.e)
The Management of Binny Limited,(B & C)Mills, Madras-1(w.e)

Sir,

Sub: Labour Dispute - B & C Mill problem - Regarding.

Ref: From the IDBI Telex Messenger No.1184812
dated 26.12.1991.

*****

I am directed to enclose a copy of the Telex Message received from the Industrial Development Bank of India, Bombay for information.

Yours faithfully,

26/12/91

for Additional Secretary to Government.

rdk.26.12.

Copy of

LAST I

41 7357 IDBI IN

1184812 IDBI IN LD: KDLY PASS ON

FOR SECRETARY DEPT. OF LABOUR GOVT. OF TAMIL NADU
MADRAS TLX NO.41 7400

FROM P L DAIRAL GM RFD IDBI BOMBAY

REG. BINNY LTD. () PURSUANT TO THE DIRECTIVES OF HIGH COURT, IDBI HAD CONDUCTED INDEPDNE ++ INDEPENDENT STUDY OF THREE ALTERNATIVE SCHEMES SUGGESTED BY CO. AND LABOUR UNIONS FOR SUBMISSION TO LABOUR COMMISSIONER () AFTER FINDINGS OF THE STUDY WAS APPROVED BY PARTICIPATING FINANCIAL INSTITUTIONS/BANKS, FINAL REPORT WAS SENT TO LABOUR COMMISSIONER WHICH WAS CONSIDERED AT THE MEETING TAKEN BY HIM ON OCT. 23, 1991 () DURING THE SAID MEETING LABOUR UNION HAD SOUGHT CERTAIN CLARIFICATIONS, AND AS DIRECTED BY LABOUR COMMISSIONER, SAME WERE FURNISHED IN THE FIRST WEEK OF NOV. 91 TO HIM () AT THE NEXT MEETING TAKEN BY LABOUR COMMISSIONER ON NOV. 18, 1991 OUR REPRESENTATIVE FURTHER CLARIFIED ISSUES RAISED BY LABOUR UNION ON FINDINGS OF REPORT () FURTHER AT THE MEETING CONVENED BY YOU ON DEC. 13, 1991 OUR REPRESENTATIVE HAD AGAIN CLARIFIED THE ISSUES RAISED BY LABOUR UNION () IN THIS BACKGROUND, YOU WOULD OBSERVE THAT WE HAVE FROM TIME TO TIME CLARIFIED ALL THE POINTS/ISSUES RAISED BY LABOUR UNIONS SO FAR() WE FEEL NO USEFUL PURPOSE WOULD BE SERVED IN HOLDING MEETING WITH UNIONS ON THE SCHEMES WHICH HAVE BEEN CONSIDERED UNL++ XXXXXXXX UNVIABLE () TRUST TY++ YOU WOULD APPRECIATE OUR VIEW POINT ()

MSG NO.752 26/12/91

41 7357 IDBI IN

1184812 IDBI IN PL ACK DR ACKD AND WAIT DR.

/true copy/

Section Officer. 26/12

இணைப்பு எண்: 4

## DEMANDS OF THE WORKMEN PENDING SETTLEMENT

1. The Unions have been demanding that the wage Revision effected for the workmen in the Textile Industry in Tamilnadu should periodically be extended to the B & C Mills Workmen also.

The last such revision was made by the Justice Varadan Award in the case of other workmen in Tamil Nadu Textile Industry.

The Varadan Award benefits should be extended with retrospective effect from 1st May 1986.

In case of revision of work norms also the pattern prescribed in Part II of Justice Varadan Award should be followed with the stipulation that (a) there should be no compulsory retrenchment and (b) the gains should be shared with the workmen.

In case of future revisions in the Textile Industry, benefits of the same should also be available to the Workmen of B&C Mills.

N O T E:

a) For the time rated operatives, those on running scales of pay annual increment to be settled.

b) For Piece-rated occupations, Dearness Allowance should not be merged with basic wages.

c) While implementing the Award, regarding Staff, revise the annual increament by 1% increase on the revised basic pay after merger and fix the running scale of pay and rearrange High cost Allowance in the same manner as had been done in the earlier settlement dated 6.6.1980.

2. Basing on our earlier discussion during November 1990, negotiate and settle the efficiency for Piece-rated occupations and the incentives.

All piece-rated wages calculations should be based on 8 Hours.

3. Medical reimbursement for workmen who are not covered by E.S.I. Act, and their families and payment of wages during the period the workmen on sick leave, on production of a Medical Certificate from a Registered Medical Practitioner.

4. Restore Night/'C' shift allowance, sick leave allowance and temporary war production allowance to all the workmen to the present and new entrants.

5. THE FOLLOWING PRIVILEGES AND BENEFITS RESTRICTED/WITHDRAWN BE RESTORED.

a) Fraction of a day's leave
b) A month's wages on the date of retirement
c) Train late permission
d) Gate entry timings
e) Absent conversion through petition
f) Absent without leave on a day preceeding or following a non-scheduled festival holiday - Automatic conversion to leave.
g) Off payment
h) Promotions
i) All kinds of incentives prevailing before 1980.

6. Supply of Uniform to all workmen

Supply of Soap to all workmen.

7. Trainees should be confirmed after the completion of two years.

8. Abolition of contract system in Security Department.

9. Heat Allowance, Dust Allowance, Risk Allowance to be introduced wherever applicable.

10. CANTEEN:

a) Full Meals

b) Morning tiffin

c) Tea supply in 'B' shift in first session also.

NOTE:

This is without prejudice to our right to add to amend or alter this list of demands.

13th March 1991.

EXTRACT FROM THE ORDERS OF THE DIVISION BENCH, MADRAS HIGH COURT ON THE MISCELLANEOUS PETITIONS IN WRIT APPEAL NOS.530 AND 531/91

DATED 19-6-1991 :

When this Court was confronted with the issue as to what may be done with respect to the emoluments of the workmen during the pendency of the appeals and the Writ Petitions and until the report of the Commission is received, it took into account the provisions of Section 25(O) of the Industrial Disputes Act, 1947 as well asthe challenge to its vires in one of the writ petitions, namely, W.P.No.5103 of 1991. The Court is aware that so long as the provisions of law is not declared ultra vires, it holds the field. In terms of what is provided in sub-section (6) of Section 25(O) of the act, where the permission for closure has been refused, the closure of the undertaking shall be deemed to be illegal from the date of closure and the workmen shall be entitled to all the benefits under any law for the time being in force as if no notice had been given to him. This Court would have ordered for payment of all legal benefits by way of salary etc. to the workmen. Yet, in the interest of all concerned, particularly the financial constraints on the management with respect to which lengthy arguments were advanced, decided to go by

consensus-more or less the consent of the parties, and accordingly ordered that all employees of the Mills shall receive 50 per cent of their respective gross emoluments for the month of April 1991, in the first week of May, 1991 and for the month of May, 1991, in the first week of June, 1991 inclusive of the provisions in case of such persons who receive provisions from the stores of the mills subject to the condition that no one shall be paid less than Rs.400/- each month, viz., April and May, 1991, besides the provisions. The Court also took notice of the undertaking of the management and recorded thus:

We have already taken notice of the legal position in this behalf. The management has been benefitted by our order to the extent of half of the emoluments which under the law they were obliged to pay to the workmen. The inadequacy of the funds to meet the legal obligations to pay the employees cannot justify any order to the effect that the management would take its own time to pay the emoluments to its employees as that would amount to denying to the employees such amount of money which would be not only half, of the amount to which they are entitled to, b force them to suffer a total deprivation of any income in the month of June, 1991.

DATED 4-7-1991 :

So far as the petitions in CMP Nos. 7365 and 7370 of 1991 are concerned, the appellants have confined, in our opinion, reasonably, their claim for the provisions only and for only those who received provisions for, according to them, provisions are received in advance to be adjusted in the salary payable for the following month. They have respected the spirit of our earlier orders with regard to the payment of fifty per cent of the gross emoluments in all respects except that they have come to say before us that if those who received provisions are not supplied with such essential provisions that are necessary for their subsistence they would go without any food or subsistence. Management, however, responded to the petitions with a stout opposition that they do not have the means to raise even such amount of money which would enable them to purchase essential provisions from the Civil Supplies Department of the State Government as well as from other sources. We are, however, informed at the Bar that while the Management maintained such a stand in regard to supply of essential provisions to the employees who have been depending solely upon the provisions supplied by the stores of the Mills, while these petitions were in the course of hearing, they disbursed salary to the management staff worth about Rs.9 lakhs. While we do not see any reason to find fault

with the management paying to the managerial staff its due emoluments, we cannot understand how the management can adopt a dual policy one for the managerial staff and the other for the workmen. As managerial staff is entitled to receive emoluments the workmen are similarly entitled to receive emoluments. If there has been any decision to close the Mills that was entirely of the management and not a doing of the workmen. Atleast that is so on the record of this case and if as a consequence of such a closure by the management statutorily the workmen become entitled to a right to receive the emoluments there is no reason why the management should not obey the statute and instead decide to pay those who do not have any statutory protection.

DATED 7-8-1991 :

In the meanwhile, however, there is no control of the Court on the march of time and each day the workmen and the members of their family need food and other essential provisions. They are going without emoluments. The command of law in Section 25-O(6) is clear and categorical,

> "Where no application for permission under sub-section (1) is made, within the period specified therein, or where the permission for closure has been refused, the closure of the undertaking shall be deemed to be illegal from the date of closure and the workmen shall be entitled to all the benefits under any law for the time being in force as if the undertaking had not been closed down".

The obligation under Section 25-O(6) on the facts of this case so long as the closure is not accepted as valid shall remain attached to the management and the management shall be bound by the command of law to continue payment of wages to the employees/workmen yet, the Management ...

**JUDGEMENT DATED 27-9-91 IN W.P. NO.5102/91**

The order passed to-day will not prejudice the right of the employees to claim their emoluments pending orders on the closure application.

**MANAGEMENT SLP NO.16097/91 IN THE SUPREME COURT OF INDIA**
**GROUNDS FOR APPEAL - MANAGEMENT PAPER BOOK**
**GROUND NO.4**

The petitioner submits the remand order would involve multiplicity of proceedings and burden the Company to more loss to pay wages etc.

The order of High Court remanding the matter to the Commissioner to reconsider the entire matter afresh is not just and proper and it would create burden and liability on the petitioner in addition to it will create new additional liability and burden on the Petitioner and particularly the directions given by the High Court in para 70 and 71. High Court having noted the Company has incurred heavy loss in crores of rupees and this will further add to the loss and therefore the order of remand will lead to miscarriage of justice and excessive, hardship. This will protract the litigation further.

The Supreme Court of India by its order dated 22-10-91 dismissed the Management's Special Leave Petition No.16097/91.

3.5 Means of finance

3.5.1 Keeping in view the earlier financing plan, the revised cost of the scheme is proposed to be financed as under:

(Rs. Lakhs)

| Details | Total | Promoters Contrib. | Balance | Institutions | Bank |
|---|---|---|---|---|---|
| C. B & C RE-OPENING EXPENSES | | | | | |
| (iii) Wages during closure | 430.00 | 86.00 (20%) | 344.00 | 172.00 | 172.00 |

இணைப்பு எண்: 6


# THE MADRAS LABOUR UNION

Reg. No. 722) 176, STRAHANS ROAD, MADRAS-12. Phone : 661654

General Secretary C. MADHAVA RAO

# B & C MILLS STAFF UNION

Reg. No. 2399) 60, KRISHNADASS ROAD, MADRAS-12. Phone : 663230

General Secretary N. SRIRAMULU

President : W. R. VARADA RAJAN, B.Com., C.A.I.I.B., Ex. M.L.A.


Date 8.12.91

Thiru T.V. VENKATARAMAN, I.A.S.,
Chief Secretary
Government of Tamil Nadu
MADRAS 600 009.

Dear Sir,

BINNY LIMITED, MADRAS.

Please refer to my letter dated 4th October 1991, on the BIFR Special Bench directive to the Government of Tamil Nadu to furnish their views on whether Binny Limited had fulfilled all the terms and conditions stipulated while granting approvals for sale of land and buildings. I am yet to receive any response to this as well as other communications to the Government.

In this regard I wish to invite the Government's attention to the further additional information/data/clarification submitted to the Commissioner of Labour, by the Industrial Development Bank of India on 15th November 1991. This additional information, inter-alia, comprise the details of sale proceeds of surplus assets/real estate properties, aggregating to Rs.64.16 crores. Of these assets, details of properties at Madras are given in the Appendix to Annexure I of the IDBI data. I briefly summarise the information as under :

# THE MADRAS LABOUR UNION

(Reg No. 722) 176, STRAHANS ROAD, MADRAS-12. Phone : 661654

General Secretary *C. MADHAVA RAO*

# B & C MILLS STAFF UNION

(Reg. No. 2399) 60, KRISHNADASS ROAD, MADRAS-12. Phone : 663230

General Secretary *N. SRIRAMULU*

President : *W. R. VARADA RAJAN,* B.Com., C.A.I.I.B., Ex. M.L.A.

Date......................



| Location of property & other details | Total realisable value (Net) |
|---|---|
| 1. Cooks Road - Area 134 Grounds | Rs.543 lakhs |
| 2. Armenian Road property - Head Office premises proposed to be converted into a commercial complex - Area 37 grounds | Rs.1154 lakhs |
| 3. Boat Club - Adyar - Posh, luxuries Guest Houses - Area 22 Grounds | Rs.475 lakhs |
| 4. Buckingham Garden - Perambur Area 353 grounds | Rs.350 lakhs |
| 5. Carnatic Garden - Perambur Area 246 grounds | Rs.415 lakhs |
| 6. Ashwell Maidan - Perambur Area 287 grounds | Rs.181 lakhs |
| 7. Joint School compound - Perambur Area 194 grounds | Rs.162 lakhs |
| Total | Rs.32.80 Crores |

It may please be noted that the IDBI in its another report submitted to the Commissioner of Labour had also stated as follows:

....3

# THE MADRAS LABOUR UNION

(Reg. No. 722) 176, STRAHANS ROAD, MADRAS-12. Phone : 661654

General Secretary C. MADHAVA RAO

# B & C MILLS STAFF UNION

(Reg. No. 2399) 60, KRISHNADASS ROAD, MADRAS-12. Phone : 663230

General Secretary N. SRIRAMULU

President : W. R. VARADA RAJAN, B.Com., C.A.I.I.B., Ex. M.L.A.

Date...................



> "In view of the present sluggish market conditions for real estate properties and as some of the properties of the company are in low lying areas, initial developmental work will need to be taken up to take full advantage of the floor space index (FSI) and realise better sale value. If the assets are to be sold on 'as is where is' basis, these will not fetch remunerative amount and institutions/banks are not likely to support the proposal".

The IDBI representative Thiru M.T. PALRECHA clarified that the developmental work proposed to be taken up was building up of flats/complexes.

Thus, the whole venture is one of making profits out of real estate business. And the realisation value in some case are as abysmally low as 60000 Rs. per ground. Even the cumulative amount of proceeds realisation for 1273 grounds (with the Head Office Complex at Armenian Street and Adyar Boat Club palacial guest houses) is only Rs.3280 lakhs - an average yield of Rs.2.5 lakhs per ground only.

Thus, the proposed real estate business by the management of Binny Limited, (precisely the present promoters - Udayar Group) is not only a violation of the conditions stipulated, i.e. going into real estate business as critised by the BIFR, but also a gross underestimation misleading the Government authorities in this regard. It should also be noted that these estimates of realisation of sale proceeds of real estate relate to the period from 1994 to 1998!

....4

# THE MADRAS LABOUR UNION

(Reg No. 722) 176, STRAHANS ROAD, MADRAS-12. Phone: [illegible]

General Secretary C. MADHAVA RAO

# B & C MILLS STAFF UNION

(Reg. No. 2399) 60, KRISHNADASS ROAD, MADRAS-12. Phone: [illegible]

General Secretary N. SRIRAMULU

President W. R. VARADA RAJAN, B.Com. C.A.I.I.B., Ex M.L.A.

Date



Full information in the matter is available with the Commissioner of Labour, before whom the IDBI filed all its reports.

I trust that the Government will examine these detailed information and take appropriate actions to stop the plunder of the properties of the company by the present promoters, taking advantage of the exemption from the Urban Land Ceiling Act and permission to dispose of surplus assets. The intentions of the promoters are crystal clear - amass wealth through real estate business either by shifting process house to Bhuvanagiri or by closing the mills and go in for liquidation.

These matters involve scrutiny and investigation in public interest as wel. Hence my request to the Government to urgently initiate action in this regard.

Awaiting to hear from you.

Yours sincerely,

W.R. VARADA RAJAN
PRESIDENT
MADRAS LABOUR UNION
&
B & C MILLS STAFF UNION.

Phone : 661654
663230

# THE MADRAS LABOUR UNION

B&C MILLS STAFF UNION (B & C Mills) 60, Krishna Dass Road, Madras 1

(Registered Under the Indian Trade Union Act, 1926)

Reg. No. 722 INDIA'S FIRST LABOUR UNION Estd. 1918

176, STRAHANS ROAD, MADRAS-600 012.

President
W. R. VARADA RAJAN B.Com., C.A.I.I.B., Ex. M.L.A

General Secretary
G. MADHAVA RAO
N. SRIKANTH

Date 04.10.'91.

Thiru.T.V.VENKATARAMAN,IAS,
Chief Secretary,
Government of Tamil Nadu,
MADRAS.600 009.

Dear Sir,

B & C Mills,Madras

This I am writing in continuation of my letter dated 26th September.1991,addressed to you.

2. The Division Bench of the Madras High Court has on 27.9.91 passed orders on the writ petitions filed by the Management. The court has quashed the order passed by the Commissioner of Labour on 8.2.1991 and the case has been remitted back to him for a re-hearing and disposal in accordance with law.

3. The court has also directed the IDBI to submit its report to the Commissioner of Labour.

4. In the light of the Court order and the necessity to feed the IDBI with appropriate inputs for working out the revised rehabilitation package,certain urgent steps are called for. I briefly narrate some of the steps to be taken by the Government of Tamil Nadu.

5. It has been reported in the Press(Vide xerox copy of Economic Times report dated 29.9.91,enclosed) that the Management is likely to file a special leave petition in the Supreme Court. This again will be an exercise to delay the matters. The Government of Tamil Nadu may take immediate action to file appropriate petitions in the supreme court to ensure that no exparte injunction is obtained by the management against the High Court orders.

./2

Phone : 66 10 54

# THE MADRAS LABOUR UNION

**(B & C Mills)**

(Registered Under the Indian Trade Union Act, 1926)

Reg. No. 722 INDIA'S FIRST LABOUR UNION Estd. 1918

176, STRAHANS ROAD, MADRAS-600 012.

President
*W. R. VARADA RAJAN* B.Com., C.A.I.I.B., Ex. M.L.A.

General Secretary
*C. MADHAVA RAO*

Date 4-10-1991



6. The Government of Tamil Nadu has accepted the report of the one man (K.B.N.Singh) commission that shifting of the process house will be prejudicial to the interests of the workmen. The Government should not only convey this stand to the IDBI and SBI but also impress upon the IDBI to work out a revised package without involving shifting to Bhuvanagiri.

7. The Government may also ensure that the commissioner of labour, issues notice to the parties and commences immediately the statutory re-hearing on the management application for closure.

8. In line with the stand taken by the Government opposing the shifting of process house to Bhuvanagiri, the Government may take the following steps:

(a) With-draw the exemption granted to the proposed process house at Bhuvanagiri from power cut and peak hour restrictions.

(b) Issue orders refusing permission for shifting of Madras process house to Bhuvanagiri.

(c) Issue orders dis-approving conversion of agricultural land at Bhuvanagiri for industrial use.

(d) Issue orders with-drawing the exemption given to Binny Ltd, under Urban Land Ceiling Act for sale of surplus assets, unless the company honours the Government order not to close the mills at Madras and gives-up the proposal for shifting

Phone : 66 10 94.

THE MADRAS LABOUR UNION
(B & C Mills)
(Registered Under the Indian Trade Union Act, 1926)
Reg. No. 722 INDIA'S FIRST LABOUR UNION Estd. 1918
176, STRAHANS ROAD, MADRAS-600 012.

President
W. R. VARADA RAJAN B.Com., C.A.I.I.B., Ex. M.L.A.

General Secretary
C. MADHAVA RAO

Date.............................



process house to Bhuvanagiri.

(f) Communicate these orders/decisions to IDBI to enable them to work out a revised package for reopening and running of the composite mills at Madras.

9. It may be pertinent to point out that the Government of Karnataka, while granting approval for sale of lands in Bangalore, stipulated that any proceeds thereof should be invested only in Karnataka. The management have refused to accept this stipulation even.

10. In view of the facts that the present management has effected an illegal closure despite statutory orders rejecting the application for closure, indulged in protracted litigation as a dilatory tactics and refused to accept the findings of the one-man commission presided over by a former Chief Justic of Madras High Court, the Government must come forward to take stringent measures to compel the management to respect the keenness of the Government to reopen the B & C Mills.

CMR

Phone : 66 16 54

# THE MADRAS LABOUR UNION

**(B & C Mills)**

(Registered Under the Indian Trade Union Act, 1926)

Reg. No. 722 INDIA'S FIRST LABOUR UNION Estd. 1918

176, STRAHANS ROAD, MADRAS-600 012.

President
**W. R. VARADA RAJAN** B.Com., C.A.I.I.B., Ex. M.L.A.

General Secretary
**C. MADHAVA RAO**

Date 4-10-1991



11. I shall be glad if you will please apprise ~~[illegible]~~ the Hon'ble Chief Minister *of those matters* and secure an opportunity for a further meeting with her.

Thanking you,

Yours Sincerely,

(W.R.VARADA RAJAN)
PRESIDENT
MADRAS LABOUR UNION
B & C MILLS STAFF UNION.

BOARD FOR INDUSTRIAL AND FINANCIAL RECONSTRUCTION
Case No.52/91 in re: Binny Ltd. (BL)

26-06-1991

SPECIAL BENCH - II

Present : Shri R. Ganapati, Chairman
Shri N.C. Banerjee, Member
Shri B.D. Gupta, Member
Shri Badal Roy, Member

The following are present at the hearing:

| | | Name & Designation of the Representatives S/Shri |
|---|---|---|
| 1. | Binny Limited | S. Natarajan, Director<br>R.R. Ramamani, Advocate<br>M. Ethurajan, Executive Chairman |
| 2. | I.D.B.I. (Lead) | Md. Zakir, DGM<br>T.M. Nagarajan, DGM |
| 3. | I.F.C.I. | Sunil Kapoor, Manager |
| 4. | State Bank of India(Lead) | J.P. Varma<br>C. Paramasivam, Manager |
| 5. | Canara Bank | Capt. K. Raman, Asstt. G.M. |
| 6. | Lakshmi Vilas Bank Ltd. | L. Balasubramanian, Manager |
| 7. | Govt. of Tamil Nadu | R. Chakrapani, Dy. Secretary |
| 8. | Fraser and Ross (Auditor of the Co.) | P.S. Swaminathan, Partner |
| 9. | The Institute of Chartered Accountants of India | Kamal Gupta, Technical Director |
| 10. | The Madras Labour Union) | W.R. Varadarajan, President |
| 11. | B & C Mills Staff Union) | |

The Bench observed that .....

9. Shri Ethurajan said that, according to him the steps taken by the Company and the intention of the management to go in for real estate business were sufficient and the presentation of the accounts was in order. The Bench pointed out that the permissions for sale of some fixed assets obtained by the Company from FIs/banks/State Govts. were for the express purpose of raising resources for financing its rehabilitation costs as the Company could not generate adequate cash surpluses from its unsatisfactory operations. The conditions stipulated were not for enabling the Company to go into real estate business. In other words, it appears that on the one hand the Company approached the FIs/Bank/State Govts. for permission to raise resources for financing the cost of rehabilitation from the sale proceeds of real estate and on the other, the transactions have been shown in the books of accounts as "real estate business". The Tax authorities have also been misled in the matter. In this connection, the Bench desired the concerned State Govts. to examine whether the Company had fulfilled all the terms and conditions stipulated by them while granting approvals for sale of lands and buildings and to furnish their views to the Board within 15 days.